# சிங்கள மாணவர்கள் இரண்டாம் மொழியாகத் தமிழை கற்பதில் உள்ள சிக்கல்களும் அவற்றுக்கான தீர்வுகளும்

**M.A.S.F. Saadhiya, M.S.M. Mafaz**
Department of Languages,
South Eastern University of Sri Lanka
saadhiyas@gmail.com, mafazmsm@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

இலங்கையில் காணப்பட்ட இனப்பிரச்சினைக்கு மொழிப்பிரச்சினையே அடிப்படைக் காரணமாகியது. மொழி என்பது ஒரு இனத்தில் தோன்றிய தொடர்பாடல் கூறாகும். ஒரு மொழி ஒரு இனத்தை பிரதிபலிக்கும். அண்மைக் காலமாக சிங்கள மக்கள் தமிழ் மொழி பயில்வதில் ஆர்வம் காட்டி வருவதைக் காணலாம். ஆனால் அவர்கள் தமிழ் மொழியைப் பயிலும் போது பல சிக்கல்களுக்கு முகம் கொடுக்கின்றனர். அவற்றை ஆராய்வதாகவே இவ்வாய்வு அமைந்துள்ளது. சிங்கள மக்கள் தமிழ் மொழி பயில்வதில் காணப்படுகின்ற சிக்கல்களை வெளிக்கொண்டு வருவதும் அவற்றை தீர்ப்பதற்கான சில பரிந்துரைகளை முன்வைப்பதும் இவ்வாய்வின் நோக்கங்களாகும். சிங்கள மக்கள் தமிழ் மொழி பயில்வதில் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். சிங்கள மக்கள் தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகப் பயில்வதில் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். அவற்றினை அடையாளம் கண்டு அவற்றிற்கான தீர்வுகளை முன்வைப்பது காலத்தின் தேவையாகும். இவ்வாய்வில் முதல்நிலை ஆதாரங்கள், துணைநிலை ஆதாரங்கள் முதலியன பயன்படுத்தப்பட்டுள்ளன. நேர்காணல்கள்,வினாக்கொத்துகள் மூலம் பெறப்பட்ட தகவல்கள் முதல்நிலை ஆதாரங்களாகவும் நூல்கள், அறிக்கைகள், இணையத்தளம் முதலியவற்றிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் துணைநிலை ஆதாரங்களாகவும் இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வுக்கான முதல்நிலை ஆதாரங்கள், இரண்டாம் மொழியாக தமிழ்மொழியைக் கற்கும் பேராதனை, கொழும்பு, தென்கிழக்குப்பல்கலைக்கழக சிங்கள மாணவர்களிடமும் பல்வேறு அரச நிறுவனங்களில் தொழில் புரியும், இரண்டாம் மொழியாகத் தமிழ் மொழியைப் பயிலும் பல்வேறு மட்டங்களைச் சேர்ந்த ஊழியர்களிடமும் வினாக்கொத்துக்களை வழங்கியும் கலந்துரையாடல்களை மேற்கொண்டும் பெறப்பட்டுள்ளன. இவ்வாய்வில் மொழியியல், விவரண அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சிங்கள மாணவர்களின் தாய் மொழி சிங்கள மொழியாகும். சிங்கள மொழியானது அமைப்பியல் ரீதியாக சில சில இடங்களில் தமிழ் மொழியுடன் ஒத்துச் சென்றாலும் பெரும்பாலான இடங்களில் வேறுபடுகின்றது. அவ்வகையில் தமது தாய் மொழியான சிங்கள மொழியின் அமைப்பின் செல்வாக்கிற்குட்பட்ட சிங்கள மாணவர்கள் இரண்டாம் மொழியாக தமிழ் மொழியை கற்கும் போது மொழியியல் ரீதியாக பல சிக்கல்களை எதிர் கொள்கின்றனர்.

***பிரதான சொற்பதங்கள்****: மாணவர்கள், இரண்டாம் மொழி, தமிழ் கற்றல்*

## அறிமுகம்:

இலங்கையில் காணப்பட்ட இனப்பிரச்சினைக்கு மொழிப்பிரச்சினையே அடிப்படைக் காரணமாகியது. மொழி என்பது ஒரு இனத்தில் தோன்றிய தொடர்பாடல் கூறாகும். ஒரு மொழி ஒரு இனத்தை பிரதிபலிக்கும். அண்மைக் காலமாக சிங்கள மக்கள் தமிழ் மொழி பயில்வதில் ஆர்வம் காட்டி வருவதைக் காணலாம். ஆனால் அவர்கள் தமிழ் மொழியைப் பயிலும் போது பல சிக்கல்களுக்கு முகம் கொடுக்கின்றனர். அவற்றை ஆராய்வதாகவே இவ்வாய்வு அமைந்துள்ளது.

## 1. ஒலியனியல் தொடர்பான பிரச்சினைகள்

### 1.1 வல்லின எழுத்துகளின் மாற்றொலிகளை இனம் காணல்

தமிழ் மொழியில் வெடிப்பொலிகள் ஆறு காணப்படுகின்றன. அவை க், ச், ட், த், ப், ற் என்பவையாகும். இந்த வல்லின எழுத்துகள் ஆறும் ஒலித் தொடர்களில் ஒலியகச் சூழல் மாறுபடுவதற்கு ஏற்ப மாற்றொலிகளை பெற்று வரும். அவ்வகையில் க் /k/என்ற எழுத்து [h], [g], [k] என்ற மாற்றொலிகளையும், ச் /c/என்ற எழுத்து [s], [j], [c] என்ற மாற்றொலிகளையும், ட் /ṭ/ என்ற எழுத்து [ṭ], [ḍ], [ṟ] என்ற மாற்றொலிகளையும்,த் /t/ என்ற எழுத்] [ɘ], [d̲], [t] என்ற மாற்றொலிகளையும், ப் /p/ என்ற எழுத்து [β], [b], [p] என்ற மாற்றொலிகளையும், ற் /t̲/ என்ற எழுத்து [t̲], [r̲] என்ற மாற்றொலிகளையும் கொண்டுள்ளன. சிங்கள மாணவர்கள் வல்லின மெய்களின் மாற்றொலிகளை பயன்படுத்துவதிலும் உச்சரிப்பதிலும் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். உதாரணமாக காகம் என்ற சொல்லின் /kakam/, /kagam/, /kaham/ என்ற மூன்று உச்சரிப்பு முறைகளில் துல்லியமான உச்சரிப்பை தேர்ந்தெடுப்பது அவர்களுக்கு சிக்கலாக உள்ளது.

### 1.2 லகர ளகர ழகரப் பயன்பாடு

இடையின எழுத்துகளில் ல், ள், ழ் என்ற மெய்யெழுத்துகளின் ஒலிப்பு வேறுபாடுகளை துல்லியமாக இனம் கண்டு கொள்ள முடியாததால் சிங்கள மாணவர்கள் இவற்றின் பயன்பாட்டில் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். இவற்றில் ஒரு எழுத்துக்குப் பதிலாக இன்னுமொரு எழுத்தை உபயோகிக்கும் போது பொருள் வேறுபாடு தோன்றும். உதாரணமாக மலை என்பது புவியியல் சார்ந்த நிலத்தில் இருந்து உயரமான குன்றுகளைக் குறிக்கும். ஆனால் மழை என்பது வானத்தில் இருந்து தூறும் மழையைக் குறிக்கும். ஆனால் இந்த வேறுபாடுகளை இனம் கண்டு கொள்ளாது சிங்கள மாணவர்கள் லகர, ளகர, ழகரங்களை பயன்படுத்துகின்றனர்.

### 1.3 நகர ணகரப் பயன்பாட்டில் சிக்கல்

சிங்கள மாணவர்கள் ன், ண் என்ற மெல்லின மெய்யெழுத்துகளின் உச்சரிப்பில் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். இவற்றில் ஒரு எழுத்துக்குப் பதிலாக இன்னுமொரு எழுத்தை உபயோகிக்கும் போது பொருள் வேறுபாடு தோன்றும். உதாரணமாக எண்ணெய் என்பது ஒரு திரவத்தை குறிக்கிறது. இச்சொல் ஒலிக்கும் போது எண்ணை எனவும் ஒலிக்கின்றது. ஆயினும் என்னை என்பது தன்மை ஒருமை இரண்டாம் வேற்றுமையை ஏற்றதை குறிக்கிறது. ஆனால் இந்த வேறுபாடுகளை இனம் கண்டு கொள்ளாது சிங்கள மாணவர்கள் னகர, ணகரங்களை பயன்படுத்துகின்றனர். இந்த இரு னகர, ணகரங்களையும் மொழிக்கு முதலில் பயன்படுத்துவதையும் அவதானிக்கலாம்.

### 1.4 எ, ஏ எழுத்துகள் தொடர்பான சிக்கல்

சிங்கள மொழியில் எ என்ற விதத்திலான உச்சரிப்பைக் கொண்ட இரு எழுத்துகள் காணப்படுகின்றன. அவை එ/e/, ඇ/eə/ என்பவையாகும். சிங்கள அரிச்சுவடியானது சிங்கள மாணவர்களுக்கு එ/e/, ඇ/eə/ ஆகிய எழுத்துகள் தொடர்பான பரீட்சயத்தை வழங்கியுள்ளது. தமிழ் மொழியில் எ என்ற ஒரு எழுத்து மாத்திரமே உள்ளது. 'எ' எழுத்தின் பயன்பாட்டில் சிங்கள மாணவர்களிடையே குழப்பம் உள்ளது. ஏனென்றால் சிங்கள மொழியில் காணப்படும் එ , ඇ என்ற எழுத்துகளில் எவ்வெழுத்து தமிழ் எழுத்தான 'எ' க்கு நிகாரானது என்பதனை அவர்களுக்கு தெரிவு செய்ய முடியாமல் உள்ளது. எனவே சிங்கள மாணவர்கள் தமிழ் எழுத்தான 'எ' யை சிங்கள எழுத்துகளான එ, ඇ போலவும் உச்சரிக்கின்றனர். தமிழில் 'எ, ஏ' ஆகிய எழுத்துக்கள் இவ்விரு விதமாக உச்சரிக்கப்படுகின்றது. (எ – /e/, /ə/ , ஏ - /e:/, /ə:/) வளைநா ஒலிகளுக்கும் றகரத்திற்கும் முன் 'எ, ஏ' /ə//ə:/ எனவும் ஏனைய இடங்களில்

/e/,/e:/ எனவும் ஒலிக்கப்படும். இவ்வேறுபாடுகளை இனங்காண்பதிலும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

**1.5 குற்றியல் உகரப்பயன்பாட்டில் சிக்கல்**

தமிழ் மொழியில் உயிர் எழுத்தான உகரம் வேறுபட்ட இரு அமைப்பில் உச்சரிக்கப்படுகிறது. மொழிப் பயன்பாட்டில் உகரமானது ஒரு மாத்திரையில் உச்சரிக்கப்பட்டால் முற்றியலுகரம் என்றும் அந்த ஒரு மாத்திரையில் இருந்து விடுபட்டு குறுகி ஒலிக்கும் என்றால் குற்றியலுகரம் என்றும் அழைக்கப்படும். சிங்கள மாணவர்கள் தமிழ் மொழியைக் கற்கும் போது உ என்ற எழுத்தை மாத்திரமே கற்கின்றனர். அதன் ஒலிப்பு வேறுபாடுகள் அவர்களுக்கு கற்பிக்கப்படுவதில்லை. சிங்கள எழுத்துகளிலும் இது போன்றதொரு அமைப்பு இல்லை. எனவே அவர்கள் இரு உகரங்களையும் முற்றியல் உகரங்களாகவே உச்சரிக்கின்றனர்.

**1.6 சில எழுத்துகள் மெய்யெழுத்தில் ஒரு ஒலியனையும் உயிர் மெய்யெழுத்தில் வேறொரு ஒலியனையும் பெற்று வரல்**

தமிழ் மொழியில் ந், ற் ஆகிய எழுத்துகள் உயிர் மெய்யாக உருப்பெறும் நிலையில் தன் ஒலி இயல்பில் இருந்து நீங்கும். மெய்யெழுத்தில் ந் /n̪/ என்ற ஒலியையும், ற் /ṯ/ என்ற ஒலியையும் பெற்று இருக்கும். ஆயினும் இவை உயிர் மெய்யாகின்ற நிலையில் ற் /r̠/ என்ற ஒலியையும், ந் /n/ என்ற ஒலியையும் பெறும். இரண்டாம் மொழி தமிழ் கற்றலில் இவ்வாறான விடயங்கள் அவதானிக்கப்படாததால் சிங்கள மாணவர்கள் ந், ற் ஆகிய எழுத்துகள் மெய்யெழுத்தில் பெற்றிருக்கும் அதே ஒலியனையே உயிர் மெய்யிலும் உச்சரிக்கின்றனர். உதாரணமாக அறம் /ar̠am/ என்பது /aṭam/ என்று அவர்களால் உச்சரிக்கப்படுகிறது.

**1.7 மெய்யெழுத்துகள் உகர ஊகாரத்துடன் இணைந்து உயிர் மெய்யாக மாறும் போது மூன்று வித வடிவங்களைப் பெறுதல்**

தமிழ் மொழியில் உகர ஊகாரத்தை தவிர்ந்த ஏனைய உயிர் எழுத்துகளுடன் மெய்யெழுத்துகள் சேரும் போது அந்த உயிர் எழுத்துக்கு ஏற்ற விதத்தில் அனைத்து மெய்யெழுத்துகளும் ஒரு வரிவடிவத்தையே பெறும். உதாரணமாக மெய்யெழுத்துகள் அனைத்தும் புள்ளி நீங்கிய விடத்து அகரத்துடன் சேர்ந்ததாக கருதப்படும். ஆனால் உகர ஊகாரங்களுடன் மெய்யெழுத்துகள் சேரும் போது இந்நிலை மாற்றம் பெறுகிறது. அவற்றுடன் மெய்யெழுத்துகள் சேரும் போது அவை மூன்று வித வடிவங்களைப் பெறுகின்றன. ஆகவே சிங்கள மாணவர்கள் அவ்வாறான வரிவடிவங்களை எழுதுவதற்கு சிரமப்படுவதுடன் அவற்றிற்குரிய உயிர்மெய்யொலியை இனம் கண்டு கொள்வதிலும் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.

**2 உருபனியல் தொடர்பான பிரச்சினைகள்**

**2.1 ஒருமைச் சொற்களை பன்மைச் சொல்லாக்குவதில் சிக்கல்**

தமிழ் மொழியமைப்பில் ஒருமை, பன்மை என்ற இரு வகைப்பாடுகள் உண்டு. ஒரு சொல்லை பன்மைச் சொல்லாக்க ‘கள்’ என்ற விகுதி பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. ‘கள்’ எனும் பன்மை உருபனானது அது புணரும் சொல்லின் கடைசி எழுத்துக்கு ஏற்ப கள், ங்கள், க்கள், ட்கள், ற்கள், ர்கள் என்ற மாற்றுருபுகளைப் பெறும். ஆயினும் சிங்கள மாணவர்கள் அகப்புணர்ச்சி மாற்றங்களில் தெளிவு பெறாது பன்மை உருபாக்களில் அனைத்துக்கும் ‘கள்’ என்றே உபயோகிக்கின்றனர்.

**2.2 வேற்றுமைப் புணர்ச்சியில் சிக்கல்**

வாக்கியத்தில் பெயர்ச் சொற்களின் இலக்கணத் தொழிற்பாடு வேறுபடுவது வேற்றுமை எனப்படும். இலக்கணத் தொழிற்பாடு என்பது ஒரு வாக்கியத்தில் ஒரு பெயர்ச்சொல்லுக்கும் வினைச் சொல்லுக்கும் இடையிலுள்ள வாக்கிய ரீதியான உறவைக் குறிக்கும். தமிழ் மொழியில் வேற்றுமைகள் எட்டு காணப்படுவதாக கூறப்படுகின்றது. சொற்கள் வேற்றுமை உருபுகளை ஏற்கும் போது அதன் உள்ளக அமைப்பில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இந்த மாற்றங்கள் சொற்களின் அடிப்படை அமைப்பைக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றன. சொற்கள் ஒரு வேற்றுமை உருபை ஏற்கும் போது கூட ஏற்படுகின்ற மாற்றத்தை ஒரு விதி கொண்டு வரையரை செய்ய முடியாது. ஏனென்றால் அம்மாற்றமும் கூட சொல்லுக்குச் சொல் வேறுபடுகின்றது. இவ்வாறான மாற்றங்களில் வேற்றுமை உருபுகளை ஏற்கும் சொற்களின் இறுதி எழுத்து, பெரும் செல்வாக்குச் செலுத்துவதைக் காணலாம். அவ்வகையில் சில சொற்களின் இறுதி எழுத்து வேற்றுமையை ஏற்று உயிர்மெய்யாகத் திரியலாம். சில சொற்களின் இறுதி எழுத்து இரட்டிக்கலாம். சில சொற்கள் சாரியைகளைப் பெற்று வரலாம். சில சொற்கள் முழுமையாகவே அதன் ஒலியன் தொடரில் மாற்றம் அடையலாம்.

ஆனால் சிங்கள மாணவர்களுக்கு வேற்றுமை புணர்ச்சியில் ஏற்படும் இவ்வாறான மாற்றங்களை உணர்ந்து கொள்வது சிக்கலாக உள்ளது. இவ்வாறான மாற்றங்களை வகைப்படுத்தி புரிந்து கொள்வதற்கும் அவர்கள் தவறுகின்றனர். இதனை மொழியில் பயன்படுத்துவதிலும் அவர்கள் சிக்கலை எதிர் நோக்குகின்றனர். எனவே அவர்கள் பெரும்பாலும் ஒரு முறையை எல்லா சொற்களிலும் பிரயோகித்துப் பார்க்க முயற்சிக்கின்றனர். உதாரணமாக கல் என்ற சொல்லானது வேற்றுமை உருபுகளை ஏற்கும் போது கல்லை, கல்லால், கல்லுக்கு, கல்லின், கல்லினது, கல்லில் என்று மாற்றம் பெறுகிறது. இதனை அவ்வாறே பின்பற்றி அதனை இன்னுமொரு சொல்லுக்கு பிரயோகிக்க முயற்சிக்கின்றனர். அதாவது காடு என்ற சொல்லை காடை, காடால், காடுக்கு, காடுன், காடுனது, காடுல் என்று அவர்கள் பயன்படுத்துகின்றனர்.

### 2.3 புறப்புணர்ச்சியில் சிக்கல்

தற்காலத் தமிழ் மொழிப்பாவனையில் புறப்புணர்ச்சி பெருமளவில் செல்வாக்குப் பெறாததாக காணப்பட்டாலும் மொழிப்பயன்பாட்டில் இன்றியமையாததாக காணப்படுவதால் அது இரண்டாம் மொழியாக தமிழ் மொழியை கற்கும் சிங்கள மாணவர்களுக்கு கற்பிக்கப்படுகிறது. ஆனால், சிங்கள மாணவர்கள் தமிழ் மொழியின் புணர்ச்சி விதிகளுக்கு ஏற்ப இரண்டு சொற்களை இணைப்பதில் சிக்கலை எதிர்கொள்கின்றனர். சிங்கள மொழிப்புணரியலில் காணப்படும் அமைப்பியல் சிக்கல்கள் தமிழ் மொழியில் உள்ள புணர்ச்சி விதிகளை விளங்கிக் கொள்வதிலும் சிங்கள மாணவர்களுக்கு தடையாக அமையலாம்.

### 2.4 வினை அடிகளைக் கொண்டு பெயரெச்சங்களையும் வினை எச்சங்களையும் உருவாக்கிக் கொள்வதில் சிக்கல்

தமிழ் மொழியில் எச்சங்கள் இருவகைப்படும். அவை பெயரெச்சம் வினையெச்சம் என்பனவாகும். எச்சங்கள் வினையடிகளைக் கொண்டு உருவாக்கப்படுகின்றன. பெயரெச்சம் நான்கு வகைப்படும். இறந்தகால பெயரெச்சம், நிகழ்கால பெயரெச்சம், எதிர்கால பெயரெச்சம், எதிர்மறை பெயரெச்சம் என்பனவே அவையாகும். நன்னூல் வினையெச்சத்துக்கான பண்ணிரண்டு வாய்ப்பாடுகளைத் தந்தாலும் தற்கால மொழிப் பயன்பாட்டில் மூன்று வடிவங்கள் மாத்திரமே தமிழ் மொழியில் வழக்கில் உள்ளன. கூட்டு வினையாக்கத்திலும், வாக்கிய இணைப்பிலும் வினை எச்சம் பயன்படுத்தப்படும். எச்சங்களை ஆக்குவதில் சொற்களின் உள்ளக அமைப்பில் ஏற்படுத்தப்படும் மாற்றமானது நுணுக்கமானதாக காணப்படுவதால் பெயரெச்ச வினை எச்சங்களின் அமைப்பை புரிந்து கொண்டு அவற்றை வடிவமைப்பதில் சிங்கள மாணவர்கள் சிக்கலை எதிர்நோக்குகின்றனர்.

### 2.5 வினைச் சொற்களை காலங்களுக்கு ஏற்ப மாற்றுவதில் சிக்கல்

தெரிநிலை வினைமுற்றுக்களை இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றுக்கு ஏற்ப மாற்றும் போது அதன் உருபனியலில் மாற்றம் ஏற்படுகின்றது. தெரிநிலை வினைமுற்றுக்கள் (வினையடி + கால இடைநிலை + பகுதி) என்ற அமைப்பிலே தோற்றம் பெறுகின்றன. அவற்றின் காலத்தை காட்டுவது இடைநிலைகளாகும். அவ்வகையில் இறந்தகாலம் த், ட், ற், ந், த் முதலிய இடைநிலைகளையும், நிகழ்காலம் கின்று, கிறு என்ற இடைநிலைகளையும், எதிர்காலம் ப், வ், வ்வ் ஆகிய இடைநிலைகளையும் கொண்டுள்ளன. ஒருகாலத்துக்கு பல இடைநிலைகள் காணப்படுவதாலும், தெரிநிலை வினைமுற்றுக்களை காலங்களுக்கு ஏற்ப மாற்றும் போது ஏற்படுகின்ற உருபனியல் மாற்றத்தை புரிந்து கொள்வது கடிமானதாகக் காணப்படுவதாலும் சிங்கள மாணவர்கள் தெரிநிலை வினைமுற்றுகளை காலங்களுக்கு எற்ப மாற்றுவதில் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.

**2.6 திணை, பால், எண், இடம் ஆகியவற்றுக்கு பொருத்தமான பயனிலையை தெரிவு செய்வதில் சிக்கல்**

தமிழ் மொழியில் தெரிநிலை வினைமுற்றுகள் திணை, பால், எண், இடம் ஆகியவற்றை உணர்த்தும். வினைச் சொல்லில் திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் காட்டும் உருபு வினைச் சொல்லின் விகுதியாகும். உதாரணமாக 'அன்' என்ற விகுதியானது உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கையாகும். சிங்கள மாணவர்கள் இரண்டாம் மொழியாக தமிழ் மொழியை கற்கும் போது வெறுமனே அவன் வந்தான், அவள் வந்தாள் என்ற அமைப்பிலே தெரிநிலை வினைகளை கற்கின்றனர். திணை, பால், எண், இடம் ஆகியவற்றுக்கு ஏற்ப அவற்றின் உருபனியலில் ஏற்படும் மாற்றமும், அந்த மாற்றத்தை எற்படுத்தும் விகுதிகளும் தனி ஒரு அலகாக அவர்கள் கற்காததனால் திணை, பால், எண், இடம் ஆகியவற்றுக்கு ஏற்ப பயனிலைகளை தெரிவு செய்வதில் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.

**2.7 ஏவல் வினை முற்றுகளை பயன்படுத்துவதில் சிக்கல்**

முன்னிலையில் இருப்போரை ஏவுவதற்கு பயன்படும் வினை ஏவல் வினைமுற்றாகும். ஆனால், இது பேச்சு மொழிப்பயன்பாட்டில் எழுத்திலக்கணத்தில் இருந்து சற்று வித்தியாசப்படுகிறது. இந்த விடயத்தில் தெளிவு பெறாத சிங்கள மாணவர்கள் ஏவல் வினைமுற்றுகளை பயன்படுத்துவதில் சிக்கலை எதிர்கொள்கின்றனர்.

**2.8 பேச்சு மொழியும் எழுத்து மொழியும் வேறுபடுதல்**

தமிழ் மொழியில் பேச்சு மொழியும் எழுத்து மொழியும் வேறுபடுகின்றன. பொருட்களைக் குறிக்கும் சொற்களில் மட்டுமல்லாது இலக்கணச் செயற்பாட்டிலும் இவ்வேறுபாட்டைக் காணலாம். உதாரணமாக மரியாதை ஒருமைக்கு எழுத்து வழக்கில் பயன்படுத்தப்படும் 'ங்கள்' என்ற உருபு பேச்சு வழக்கில் 'ங்க' என்று பயன்படுத்தப்படுவதை குறிப்பிடலாம். இவ்வகையில் இலக்கண ரீதியாகவும், பிரயோக ரீதியாகவும் எழுத்து மொழியும் பேச்சு மொழியும் வேறுபடுவது இரண்டாம் மொழியாக தமிழை கற்கும் சிங்கள மாணவர்களுக்கு இலக்கண அமைப்பில், மொழிப்பிரயோக அமைப்பில், சொற்பயன்பாட்டில் குழப்பத்தை தோன்றச் செய்கின்றது.

**2.9கிளை மொழிகள் தொடர்பான பிரச்சினை**

தமிழ் மொழி நாட்டுக்கு நாடு, பிரதேசத்துக்கு பிரதேசம், சமூகத்துக்குச் சமூகம் வேறுபடுகின்றது. இலங்கையிலேயே பேச்சுத் தமிழானது குறிப்பாக இடத்துக்கிடம் வித்தியாசப்படுகின்றது. மட்டக்களப்புத் தமிழ் ஒரு விதமாகவும், யாழ்ப்பாணதுத் தமிழ் ஒரு விதமாகவும், மலையகத் தமிழ் இன்னுமொரு விதமாகவும்

காணப்படுகின்றன. இவ்வாறான வேறுபாடுகள் சொற்களில் மட்டுமல்ல இலக்கணக் கூறுகளிலும் காணப்படுகின்றன. மலையக மக்கள் ‘போதும்’ என்று சொல்லுவதை கிழக்கு மாகாணத்தை சேரந்தவர்கள் ‘காணும் என்று சொல்லுகின்றனர். இவ்வாறு தமிழின் பல கிளை மொழிகளைக் கொண்ட சூழலில் வாழும் சிங்கள மாணவர்கள் கிளை மொழிகளின் வேறுபாட்டால் தமிழ் கற்றலில் பல சிக்கல்களை எதிர்கொள்வதை அவதானிக்கலாம்.

இரண்டாம் மொழியாக தமிழ் மொழியை சிங்கள மாணவர்கள் கற்கின்ற போது மேற்கண்ட அமைப்பில் பல மொழியியல் சார்ந்த சிக்கல்களுக்கு முகம் கொடுக்கின்றனர். இரண்டாம் மொழியாக தமிழ் மொழியைக் கற்போருக்காக எழுதப்படும் நூல்கள் அன்றாடத் தேவைகளுக்கு பயன்படும் சொற்களைக் கொண்ட இலகுவான மொழி நடையில் எழுதப்படுவது அவசியமாகும். சிங்கள மாணவர்களுக்கு தமிழ் மொழியின் அரிச்சுவடியைக் கற்பிக்கும் போது சிங்கள அரிச்சுவடியுடன் ஒப்பிட்டு, இரண்டுக்கும் இடையிலான ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் எடுத்துக்காட்டிக் கற்பிக்க வேண்டும். மெய்யெழுத்துகளை வெறுமனே எழுத்துகளாக மட்டும் கற்பிப்பதை விட வல்லின எழுத்து, மெல்லின எழுத்து, இடையின எழுத்து என்று அதன் இயல்பான வகைப்படுத்தலிலே கற்பிப்பது சிறந்ததாகும் மாற்றொலிகளைக் கற்பிக்க சிங்கள அரிச்சுவடியில் உள்ள எழுத்துகளையே பயன்படுத்தலாம். உதாரணமாக ககர மெய்யின் மாற்றொலியான [h] வைக் கற்பிப்பதற்கு சிங்கள அரிச்சுவடியில் உள்ள (හ) என்ற எழுத்தை பயன்படுத்தலாம். உயிர் மெய்யெழுத்துகளைக் கற்பிக்கும் போது உகர ஊகாரங்கள் பெறும் வடிவங்கள் தொடர்பாக கற்பிக்க கூடுதல் பாடவேலைகள் ஒதுக்கப்பட வேண்டும். அல்லது இவற்றுக்கான உயிர் மெய்களுக்கு புது எழுத்துகள் ஒரேவிதமான வரி வடிவ அமைப்பில் தமிழ் அரிச்சுவடியில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். பெயர்ச் சொற்களை அதன் இலக்கணத் தொழிற்பாட்டுக்கமைய வகைப்படுத்தி (Grammatical categorization) கற்பிக்க வேண்டும். வேற்றுமையை கற்பிக்கும் போது சிங்கள மொழியில் காணப்படும் විභක්ති யுடன் ஒப்பிட்டுக் கற்பிக்கும் போது சிங்கள மாணவர்கள் வேற்றுமையில் தெளிவு பெறுவர். அகப்புணர்ச்சி தனியான ஒரு பகுதியாக கொள்ளப்பட்டு ஆழமாகக் கற்பிக்கப்பட வேண்டும். பொதுவாக சிங்கள மாணவர்களுக்கு தமிழ் மொழியின் இலக்கணத்தைக் கற்பிக்கும் போது தமிழ் மொழி அமைப்புக்குள் மாத்திரம் நின்று தமிழ் இலக்கணத்தை கற்பிப்பதை விட, சிங்கள மொழி அமைப்போடு தொடர்புபடுத்தியும் தமிழ் மொழி இலக்கணத்தைக் கற்பிப்பதால் தமிழ் இலக்கணக் கூறுகள் தொடர்பாக அவர்களுக்கு அதிகமான தெளிவு ஏற்படும். இலக்கணம் கற்பிப்பதில் நவீன மொழியியல் அணுகுமுறையை (Linguistic apporoach) பயன்படுத்த வேண்டும். தமிழ் பேச்சு மொழியைக் கற்றுக் கொடுக்க ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கிளை மொழியை மாத்திரம் பயன்படுத்துவது பொருத்தமானதாகும். இவ்வாறான வழிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் இரண்டாம் மொழியாகத் தமிழ் மொழியைக் கற்கும் போது ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.